சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திரு.க.மாடசாமி – கருணை அடிப்படையிலான பணி நியமனம் – வரித்தண்டலர் பணியிடத்தில் 17.07.2000 முற்பகல் முதல் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (3டி) எண்.05

நாள் 16.05.2022
(திருவள்ளுவர் ஆண்டு 2052
சுபகிருது, வைகாசி–02)

படிக்கப்பட்டது:

1. அரசாணை எண்.206, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 02.11.1995.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

மேலும் படிக்க:

3. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.க.எண்.5551/2012/ப2, நாள் 06.05.2019 மற்றும் ந.க.எண்.684/1999/ப2, நாள் 06.07.2000,
4. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண். 6438/2019/அ6, நாள். 22.10.2020.

*****

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் "பணியிடை காலமான பேரூராட்சிப் பணியாளர்களான பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகியோரின் வாரிசுதாரர்களும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடங்களுக்கு தகுதி பெற்றவர்களை நியமனம் செய்து தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று அவரவர் பணியினை ஆணை வெளியிடப்படும் நாள் முதல் வரன்முறைப்படுத்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது."

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் திருநெல்வேலி மண்டலம் மற்றும் மாவட்டம், வீரவநல்லூர் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து, 07.06.1975–ல் பணியிடையில் காலமான திரு.எஸ்.கருப்பசாமி என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.க.மாடசாமி என்பவருக்கு பணகுடி பேரூராட்சியில் துப்புரவு

மேற்பார்வையாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு 05.06.1996-ம் நாள் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், அதன் பின் தனது கல்வித் தகுதிக்கேற்ப பணி வழங்கப்படவில்லை என்பதால் தமக்கு, வரித்தண்டலர் பணியிடம் வழங்கும்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 10.02.1999-ல் விண்ணப்பித்ததை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.684/1999/ப2, நாள் 06.07.2000-ன்படி, பணகுடி பேரூராட்சியில் வரித்தண்டலராக கருணை அடிப்படையில் மறு பணி நியமனம் செய்யப்பட்டு கடந்த 17.07.2000 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், இதற்கு பின்னேற்பு அரசிடம் பெற்றுத்தருமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். பார்வை-4-ல் கண்டுள்ள கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் செயலுக்கு பின்னேற்பு வழங்குமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள் தனது கருத்துருவில் அரசுக்கு பரிந்துறை செய்துள்ளார்.

4. பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதன்படி திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிபுரிந்து 07.06.1975-ல் பணியிடையில் காலமான திரு.எஸ்.கருப்பசாமி என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.க.மாடசாமி என்பவருக்கு பணகுடி பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக கருணை அடிப்படையில் 05.06.1996 முதல் பணிநியமனம் செய்யப்பட்டு, பின்பு தனது கல்வித் தகுதிக்கேற்ப பணி வழங்கப்படவில்லை என்பதால் தமக்கு, வரித்தண்டலர் பணியிடம் வழங்கும்படி 10.02.1999-ல் விண்ணப்பித்ததை தொடர்ந்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.684/1999/ப2, நாள் 06.07.2000-ன்படி பணகுடி பேரூராட்சியில் வரித்தண்டலராக கருணை அடிப்படையில் மறு பணிநியமனம் செய்யப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சி தலைவரின் செயலுக்கு பின்னேற்பு வழங்குவதுடன், அவரது பணியினை 17.07.2000 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தனியர் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்த 05.06.1996 முதல் 16.07.2000 வரையுள்ள காலத்தை எவ்வித பணிக்கால / ஓய்வூதியப் பலன்களுக்கும் எடுத்துக் கொள்ளக் கூடாது எனவும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், திரு.க.மாடசாமி என்பவர் வரித்தண்டலர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நடைமுறையிலுள்ள விதிகளின்படி வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அதனை பெற அவர் தகுதியுடையவராகிறார். மேலும், மேற்படி தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள உரிய அலுவலருக்கு அறிவுரை வழங்குமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

பேரூராட்சிகளின் ஆணையர் , சென்னை-600 028.

திரு. திரு.க.மாடசாமி, பணகுடி பேரூராட்சி, திருநெல்வேலி மாவட்டம்.
(பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக).

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்.
(பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
(பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)

**நகல் :-**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை – 600 009.

தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை – 600 009.

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை – 600 009.

இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்